விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 தை 16 ஜ- அவ் 7 இதழ் 345
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-1-1985

## கத்தோலிக்க அச்சகத்தில் ஆயுதப்படை சோதனை

### ஊழியர்கள் விசாரிக்கப்பட்டு விடுதலை

[யாழ்ப்பாணம்]

சுண்டுக்குளி புனிதவளன் கத்தோலிக்க அச்சகம் நேற்று ஆயுதப்படையினரால் சோதனையிடப்பட்டது. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் சுமார் முப்பது பேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

சுண்டுக்குளியிலுள்ள புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தை நேற்று சோதனையிட்ட ராணுவத்தினர் அங்கிருந்த சில புத்தகங்கள், பத்திரிகைகள் ஆகியவற்றை எடுத்துச் சென்றனர். சிறிது நேரத்தின் பின் மீண்டும்வந்து அங்கிருந்த ஊழியர்கள், 4 பெண்பிள்ளைகள் உட்பட சுமார் 30 பேரையும் அழைத்துச்சென்று விசாரணை நடத்தினர். விசாரணையின்பின் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

சோதனை இடம்பெற்ற போது அங்கிருந்த 'சட்டர்டே ரீவியூ' ஆசிரியர் காமினி நவரட்ணவும் ராணுவத்தினரால் அழைத்துச்செல்லப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிகின்றது.

### ஆசனக் கோயில் சோதனை

நேற்றுப் பிற்பகல் யாழ். ஆசனக்கோயிலிலும் ராணுவத்தினர் சோதனை நடத்தினர். கோயிலின் சகலபகுதிகளையும் அவர்கள் சுற்றிப் பார்த்தபோதிலும் அசம்பாவிதமான சம்பவமெதுவும் நடைபெறவில்லை.

(4-ம் பக்கம் 5-ம் கலம்பார்க்க)

- கரைச்சியில் சம்பளப்பணம்;
- யாழ்.நகரில் தனியார் நிதிஸ்தாபனம்;
- நீர்வேலியில் கூட்டுறவு சங்கக்கடை.

## நேற்று இடம்பெற்ற சில கொள்ளைகள்!

(யாழ்ப்பாணம்)

கரைச்சி மாவட்ட அபிவிருத்திசபை உபஅலுவலகத்தில் சம்பளப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது

நீர்வேலி கூட்டுறவுச் சங்கக்கடையில் சீனி மூடைகளும், பால் உணவுகளும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ். நகரில் தனியார் நிதி ஸ்தாபனம் ஒன்றில் ஒருலட்சத்துக்கு மதிகமான பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

நேற்று வடபகுதியில் இடம்பெற்றுள்ள கொள்ளைச் சம்பவங்களில் சிலவாகும்இவை.

## சம்பளப்பணம் ரூ.10,000 கொள்ளை

[கிளிநொச்சி]

கரைச்சி அபிவிருத்திச்சபை உப-அலுவலகத்தில் ஊழியர்களின் சம்பளப்பணம் ரூ. 10,000 நேற்றுக்காலை கொள்ளையடிக்கப்பட்டது.

ஆயுதம் தாங்கிய இளைஞர்களினால் நடத்தப்பட்ட இக் கொள்ளையின்போது 2 தட்டச்சுயந்திரங்களும், ஒரு ரோனியோ யந்திரம் ஆகியவற்றையும் எடுத்துச் சென்றுள்ளனர்.

### மூன்று வாகனங்கள் கொள்ளை

நேற்று முன்தினம் இரவு பரந்தன் வை எம். சி ஏ

(4-ம் பக்கம் 2-ம்கலம்பார்க்க)

## மற்றொரு நிதிநிறுவனத்தில் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரில் மற்றொரு தனியார் நிறுவனத்தில் இனந்தெரியாதவர்களால், ஒரு லட்சம் ரூபா, இரும்புப்பெட்டியுடன் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மேர்கண்டைல் கிறடிற் லிமிட்டட் ஸ்தாபனத்திலேயே இக் கொள்ளை நடந்துள்ளது. நேற்றுமுன்தினமிரவு ஸ்தாபனத்தின் முன்பக்க கதவை உடைத்து திறந்து இக் கொள்ளை நடத்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. சில பத்திரங்களும் என்வலப்புகளும் சிதறப்பட்டுக் கிடந்தன. பணத்துடன், சில காசோலைகளும், கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

## சீனி, பால்மா கொள்ளை

[ஊரெழு நிருபர் கனகசூரியர்]

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்றுக்குள் ஆயுதங்கள் சகிதம் நுழைந்த 10 பேர் கொண்ட இளைஞர் கோஷ்டி அங்கிருந்த உத்தியோகத்தர்களை பயமுறுத்திவிட்டு சுமார் 10 சீனி மூடைகள், பால்மாரின்கள், பாக்கட்டுகள், போத்தல்கள் உட்பட ஏராளமான உணவுப் பொருட்களைக் கொள்ளையடித்து சென்றுள்ளது.

நேற்று காலை 9-30 மணியளவில் நீர்வேலி கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இக் கொள்ளை இடம்பெற்றது

## துர்க்கையம்மன் ஆலயத்தில் வழிபடவந்த 18 இளைஞர் கைதாகி விடுதலை

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயத்தில் வழிபட்டுக் குச் சென்ற 18 இளைஞர்கள் இராணுவத்தினரால் அழைத்துச் செல்லப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர்

நேற்று முன்நனம் மேற்படி ஆலயத்துக்கு வந்த இராணுவத்தினர் அங்கு ஆலயவழி

4-ம் பக்கம் 3ம் கலம் பார்க்க)

## வெளியேறும் மக்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மக்கள் அங்கிருந்து வெளியேறிவருகின்ற

(2-ம பக்கம் 5-ம்கலம் பார்க்க]

## தபாலகங்களில் கொள்ளை

(பண்டத்தரிப்பு)

வெள்ளை நிற வானொன்றில் திடீரென வந்திறங்கிய இளைஞர் கோஷ்டியொன்று பண்டத்தரிப்பு தபால் அலுவலகத்தில் 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான முத்திரைகளையும் அங்கிருந்த பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

வட்டுக்கோட்டை, சங்காணை, மானிப்பாய் ஆகிய தபால் அலுவலங்களிலும் முத்திரைகள், பணம் ஆகியன கொள்ளையடிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கான்ஸ்டபிள் கடத்தப்பட்டார்

(கொழும்பு)

கல்முனையிலிருந்து பொத்துவில் நோக்கி பஸ்ஸில் சென்று கொண்டிருக்கையில இனந்தெரியாதவர்களால் பொலிஸ் கான்ஸ்டபிள் ஜெயரத்ன என்பவர் கடத்திச் செல்லப் பட்டுள்ளார்.

இவரைக்கண்டு பிடிப்பதில் உதவிபுரியுமாறு கிழக்கு மாகாணமக்களுக்கு பொலிஸ் மா அதிபர் ருதரா ராஜசிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஹட்டன் நாஷனல் வங்கியில் ஒருகோடி பெறுமதியான நகைகள் தப்பின

[யாழ்ப்பாணம்]

யாழ். ஹட்டன் நாஷனல் வங்கியில் நடந்த கொள்ளையின்போது சுமார் ஒரு கோடி ரூபா பெறுமதியான நகைகள் தப்பிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது,

260 லொக்கர்களில் 201 லொக்கர் மட்டுமே காஸ் சிலிண்டரினால் உடைக்கப்பட்டிருந்தது. இருஇரும்புப் பெட்

[4-ம் பக்கம் 3ம கலம் பார்க்க]

## அமைச்சர் 'றெனி' பிரிட்டன், பிரான்ஸ் பயணம்

[கொழும்பு]

சர்வகட்சி மகாநாடு தோல்வியடைந்த பின்னர் இலங்கையின் தற்போதைய நிலைகுறித்து எடுத்துரைப்பதற்காக நிதியமைச்சர் திரு. றெனி டி மெல் பிரிட்டன், பிரான்ஸ், சுவிற்சர்லாந்து உட்பட ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளுக்கு விஜயத்தை மேற்கொண்டு நேற்றுப் பயணமானர்.

வெளிநாடுகள் இலங்கைக்கு வழங்கும் உதவிகளைக் குறைக்க முயற்சிகள் நடப்பதையடுத்து, இது தொடர்பாகவும் திரு. றெனிடிமெல் அந்நாடுகளுடன் பேச்சுநடத்தவுள்ளார்.

## இலங்கை மாலுமிகள் நாடுதிரும்பினர்

(கொழும்பு)

இந்திய கடலோரக் காவல் படையினரால் இம்மாதம் 11ம் திகதி ராமேஸ்வரத்தில் வைத்து கைதுசெய்யப்பட்ட, இலங்கை கடற்படையைச் சேர்ந்த காப்டன் குணத்தில

[3-ம் பக்கம் 1ம்- கலம்பார்க்க]

## பேராதனை மாணவர்களுக்கு விசேட பஸ் ஒழுங்கு

(யாழ்ப்பாணம்)

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் கண்டிக்கு செல்வதற்கான விசேட பஸ்சேவை ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்த பஸ் எதிர்வரும் வெள்ளி அல்லது சனிக்கிழமை

(3-ம் பக்கம் 1-ம்கலம் பார்க்க)

## இந்தியாவிற்கு அழைப்பு!

யாழ். தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் [Jaffna Telephone Exchange] ஊடாக சர்வதேச அழைப்புக்கள் நேரடியாக சுழல் [Direct dial] செய்ய இயலாதிருக்கின்ற போதிலும், இந்தியா உட்பட நேரடிச் சுழல் வசதியுள்ள சகல வெளிநாடுகளுக்கும்நேரடித் தொலைபேசி அழைப்புக்களை எமது பணியகத்தில் பெற்றுத்தருகிறோம்.

யாழ். நகரில் தொலைபேசி வசதியுடையவர்களுக்கும் வெளிநாடுகளுக்கு நேரடித் தொடர்பு ஏற்படுத்தித் தருவோம்.

இதர விபரங்களை அறிந்து கொள்ள, 'குளோபல்' சர்வதேச ரெலெக்ஸ் ரெலிபோன் சேவையாளர்களுடன் ரெலிபோனில் (23015, 23249, 23312) தொடர்பு கொள்ளவும்.

ADVT. 1583

# அரிவளம்பரம்

## விற்பனைக்கு

கச்சேரிகிழக்கு வேலனில் 2 பரப்பு காணியும் ஆனந்தன் வடலி வீட்டிலுள்ள 3 பரப்பு காணியும் விற்பனைக்குண்டு தொடர்பு ச. பாக்கியநாதன் 4 அருளம்பலம் வீதி அரியாலை யாழ்ப்பாணம். 1571

ஆனைக்கோட்டையில் நவாலி ரோட், மானிப்பாய்ரோட் சந்திக்கருகாமையில் ஐந்து பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; P கனகரத்தினம், 37(71) கச்சேரி- நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். 1554

பலாலி ரோட்டில் இருந்து உரும்பிராய் சந்தியில் 100 யாருக்குள் நல்ல சுற்றுமதில் உள்ள மூன்றுவது காணி (2¼) பரப்பு மின்சாரவசதியுள்ள வீட்டுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சண்முகம் கந்தையா, செல்வபதி, உடுவில் சுன்னாகம். 1568

மானிப்பாய் முதலாம்குறுக்குத்தெரு இணுவில் ரோட்டில் மூன்றுபரப்புக் காணியும் சிறிய வீடும் விற்பனைக்கு உண்டு. விரும்பினோர் கீழ்க்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும். பசுபதி கந்தசாமி முதலாம் குறுக்குதெரு இணுவில் ரோட், மானிப்பாய். 1569

யாழ்ப்பாணம் பிரதான வீதியை வாயிலாகக்கொண்ட வியாபார இடமாசப்பாவிக்கக் கூடியதாக அமைந்ததும் மூன்றும் குறுக்குத்தெரு ஊடாக பின்பாதையுள்ளதும் பின்பக்கம் வசிக்கக்கூடிய வசதியுமுள்ள காணிவிற்பனைக்கு உண்டு. தொலைபேசி 23795 யுடன் தொடர்பு கொள்க. விளம்பர இல. 1573 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். 1573

## சேவை

கலர் பிலிம் சுருள்களைச் சிறந்த முறையில் குறுகியகாலத்தில் Processing And Printing செய்துகொள்ள நாடுங்கள் கொழும்பு ஸ்ருடியோ. யாழ்ப்பாணம். 1511

## குத்தகைக்கு

கோட்டாமில் (40,000kg.) குத்தகைக்கு கொடுக்க இருக்கிறது. யாழ். நகரில் இருந்து 3 மைல் தொலைவில் பிரதான வீதியில் இருக்கிறது. தொடர்பு கொள்ளவும். 1519, C/o ஈழநாடு. 1519

## தவறிவிட்டது

பூபாலசிங்கம் புத்தகக் கடைக்கு அண்மையில் எனது முக்கியமான கணக்குப்புத்தகமும், இன்னும் சில தஸ்தாவேசுகளும் சிறிய கைப்பையுடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் திருப்பிக்கொடுத்தால் தகுந்தசன்மானம் அளிக்கப்படும். மு.மாணிக்கவாசகர், 122, ஆஸ்பத்திரி வீதி, டெலிபோன்:22311, மரக்கறி மார்க்கட்டின் முன். 1556

## தொழிற்சாலை தகர்ப்பு

(கொழும்புத்துறை)

அச்சுவேலி - பருத்தித்துறை வீதியிலுள்ள வல்லை சீனித் தொழிற்சாலைக் கட்டிடம் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. அச்சுவேலி தெங்கு-பனம்பொருள்உற்பத்தி விற்பனவுக் சங்கத்திற்குச் சொந்தமான பனஞ்சீனித் தொழிற்சாலைக் கட்டிடமே குண்டு வெடிப்பிலுல் தரைமட்டமாகியுள்ளது.

## மா, அரிசி சீனிக் கப்பல்கள்

(மாவிட்டபுரம்)

பதினேயாயிரம் தொன் மா, ஐநூறு தொன் அரிசி, ஐநூறு தொன் சீனி ஆகியவற்றை ஏற்றிக்கொண்டு இரண்டு கப்பல்கள் காங்கேசன்துறைத் துறைமுகத்துக்கு வரவிருக்கின்றன.

நாளையும், எதிர்வரும் வெள்ளிக்கிழமையும் காங்கேசன் துறைமுகம் வரும் மேற்படி இருகப்பல்களினதும் இறக்குமதி வேலைகளை ஜெயபாலசிங்கம் கம்பனியார் மேற்கொண்டுள்ளனர்.

### தனிப்பட்ட நலன் கருதியே

# சில பௌத்த தேரோக்கள் அரசியல்வாதிகளுடன் உறவு

## ஒரு 'தேரோ' கூறுகிறார்

[கொழும்பு]

''பௌத்த சங்கத்தின் சில மஹாநாயக்க தேரோக்களும், பிக்குகளும் தமது தனிப்பட்ட நலன் கருதியே அரசியல் வாதிகளுடன் நட்பு வைக்கின்றனர்.''

இவ்வாறு வண. கெல்ஹெனவெ சோமராமதேரோ என்ற பௌத்த மதகுரு தெரிவித்துள்ளார். புளத் சிங்கள தொகுதியில் கடந்தவாரம் நடைபெற்ற சமயக்கூட்டமொன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

வண. சோமராமதேரோ மேலும் கூறியதாவது: 'சில மஹாநாயக்க தேரோக்களும், பிக்குகளும் அரசியல் லாபம் பெற முயலுகிறார்கள். தமது சொந்த நலன்கருதி அவர்கள் அரசியல்வாதிகளுடன் நட்புக் கொள்கிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் இந்த நாட்டின் பௌத்தமதநெறியையே பாழாக்குகிறார்கள். சாதாரண மக்களை நல்வழிப்படுத்தும் விதத்திலே பௌத்தமத குருமார்கள் அரசியல்வாதிகளுக்கு உதவவேண்டும்,

ஆனல் அரசியல்வாதிகளிடமிருந்து சொகுசான வாழ்க்கையை சில பௌத்த குருமார்கள் எதிர்பார்க்கிறார்கள். அரசியல்வாதிகளை சார்ந்திராது பணிபுரிவதே பௌத்த குருமாரின் முக்கிய நோக்கமாக இருக்கவேண்டும்'' என்றார். (கி)

### யாழ். மாவட்டத்திற்கு

# இடமாற்றம் பெற்ற ஆசிரியர்கள் விபரம்

(கொழும்பு)

வெளி மாவட்டங்களில் இருந்து 28 ஆசிரியர்கள் உடனடியாக யாழ் மாவட்டத்திற்கு இடமாற்றம்பெற்றுள்ளனர்.

பெப்ரவரி முதலாம் திகதி முதல் இடமாற்றம் பெறுபவர்களின் விபரம் வருமாறு;

**மட்டக்களப்பு**

திருமதி என். கதிர்காமத் தம்பி வந்தாறுமூலை ம. வித்; திருமதி ஜி மகாலிங்கம் சிசிலியாஸ் ம வி.

**முல்லைத்தீவு**

எல். சந்திரராஜா வள்ளுவர் புரம் த. வித்; திருமதி ரி. குமாரசாமி சி. சி. ரி. பாடசாலை; திருமதி சரஸ்வதி சின்னையா மல்லாவி ம. வித்தி.

**மன்னார்**

திருமதி இரத்தினேஸ்வரி கந்தசாமி புனித சேவியர் மகளிர் கல்லூரி; செல்வி கிருபாதேவி வீரசிங்கம் புனித சேவியர் மகளிர் கல்லூரி; எஸ். துரை வீரசிங்கம் ஸாஹிரா ம. வி.

**வவனியா**

திருமதி கே. சபாரத்தினம் வவனியா சி. சி. ரி. வி; திருமதி ஆர். ராஜகோபால் இறம்பைக்குளம் தமிழ் வித்தியாலயம் வவனியா, செல்வி என் மகேஸ்வரி வவனியா சி. சி. ரி. வி, திரு. ஐ. குமாரசிங்கம் தமிழ் வித்தியாலயம் மாங்குளம்; திரு வி. மகாலிங்கம் பம்பைமடு தமிழ் வித், வவனியா, திரு பி. சிவராஜா பூவரசங்குளம் வவனியா; திருமதி கே. சுப்பிரமணியம் கோவில் புதுக்குளம் தமிழ் வித்தியாலயம் வவனியா; செல்வி சுந்தரேஸ்வரி சுப்பிரமணியம் செட்டிகுளம் தமிழ் வித்தியாலயம் வவனியா; திரு எம் பேரம்பலம் தமிழ் வித்தியாலயம் வவனியா; திரு. பி. சிவபாலதாஸ் பூவரசங்குளம் தமிழ் வித்தியாலயம் வவனியா;

திருமதி யு. யோகானந்தன் நொச்சிமோட்டை தமிழ் வித்தியாலயம் வவனியா; திருமதி பி. மகாலிங்கம் பம்பைமடு தமிழ் வித்தியாலயம் வவனியா; திருமதி ரி, அருச்சுனன் நெடுங்கேணி மகாவித்தியாலயம் வவனியா; திரு. எஸ். யோகானந்தன் புது. சின்னக்குளம் ம. வி. ஒமந்தை வவனியா; செல்வி எஸ். பரமநாதன் நொச்சிமோட்டை த. வி. வவனியா.

**திருகோணமலை**

திருமதி பி. மாணிக்கம் சென், பிரான்சிஸ் சேவியர் ம. வி. திருகோணமலை.

**கிளிநொச்சி**

திரு. கே. சிவபாதரத்னம் தர்மபுரம் த. வி. கிளிநொச்சி.

**புத்தளம்**

திரு. வி. கயிலேஸ்வரன் இந்து தமிழ் வித்தியாலயம் புத்தளம்.

**நுவரெலியா**

எஸ். அற்புதராணி சரஸ்வதி ம. வி. லின்டல.

**கொழும்பு**

எஸ். பொன்னுத்துரை, பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி;

**வவனியாவிலிருந்து முல்லைத்தீவுக்கு இடமாற்றம் பெற்றோர்**

திருமதி எஸ். எம். யோசெப் தமிழ்வித்தியாலயம்; நெடுங்கேணி; திருமதி எஸ். பொன்னையா சிவப்பிரகாசவித்தி வவனியா; திருமதி றெஜினு தயாமரை இராமலிங்கம் டறிபேக் கல்லூரி சாவகச்சேரியிலிருந்து மன்னருக்கு இடமாற்றம் பெற்றுள்ளார்.

இவ் இடமாற்றத்திற்கான பெயர்ப்பட்டியல் கல்விச் சேவை ஆணைக்குழுவினுல் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாக ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் திரு. என். சிவஞானம் தெரிவித்தார்.

## வெளியேறும்...

(1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

னர்.

இப்பகுதியில் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்டுக் கொண்டிருப்பதைத் தொடர்ந்தே இவர்கள் வெளியேறி வருகின்றனர்.

## யாருடையது

நுணுவில் தேவாலய ஒழுங்கையைச் சேர்ந்த திரு. மகாராசா மகாசெபம், திருகோணமலை டோக்யாட் வீதி திரு காளிதாஸ் பார்த்திபன் வேலணை கிழக்கு திரு. கார்த்திகேசு இராசரெத்தினம் கொட்டாஞ்சேனை ஜம்பட்டா வீதி திருமதி சண்முகம் மகேஸ்வரி ஆகியோரின் அடையாள அட்டைகளும்' யாழ். ஹற்றன் நாஷனல் வங்கியில் கண்டு எடுக்கப்பட்ட பணத்துடன் கூடிய லேடீஸ் பேர்சும் 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அலுவலக நேரத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளவும்.


# அறிவித்தல்

வாடிக்கையாளர்கள், வியாபாரிகள், பாவனையாளர்கள் அனைவருக்கும்

## ஓர் அறிவித்தல்

எமது தோலகட்டி தயாரிப்புகளான

## நெல்லி ரசம், முந்திரிகை ரசம்

போன்ற பழரசங்களின் போலிகள் எமது தயாரிப்பு போன்று போலி லேபல்களில் உலவுவது எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது போலிகள் உடல் நலத்திற்கு தீங்குசெய்யும் இரசாயன செயற்கை மூலப்பொருட்கள்கொண்டு தயார் செய்யப்படுகின்றன. ஆகவே வியாபாரிகள் எமது அசல் தயாரிப்பான நெல்லிரசம், முந்திரிகை ரசம் மற்றும் எமது பொருட்களை விநியோகம் செய்வதற்கும், வாடிக்கையாளர்களுக்கு சிறந்ததையே அளிக்கும் முகமாகவும் ஜோ. எகட்டன் சனித் மார்க்கட்டிங் யாழ். நகர் என்னும் முகவரை 1985 ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நியமித்துள்ளோம் என்பதை பெரு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம் உங்கள் தேவைகளுக்கு அவர்கள் உங்களை வாரம்தோறும் சந்திப்பார்கள். எங்கள் தயாரிப்புகளை அவர்களிடம் பெற்று தோலகட்டி தயாரிப்புகளுக்கு ஆதரவு நல்குக!

தோலகட்டி தயாரிப்பாளர்கள்,

ஜோ. எகட்டன் (சனித்) (மார்க்கடிங்) மொத்த வியாபாரிகள் யாழ்ப்பாணம்.

செபமாலை தாசர் சபை தோலகட்டி, வசாவிளான்.

சனித் விளம்பர சேவை (1572)



## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

# பகல் பஸ் சேவை

யாழ்./கொழும்பு பஸ் சேவை மீண்டும்
30-1-85 (புதன்கிழமை)
காலை 8-00 மணிக்கு ஆரம்பமாகும்.
உங்கள் ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

பிள்ளையார் ஸ்ரோர்ஸ்,
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 23166


# பிறந்த தின வாழ்த்து

## செல்வி குலசிங்கம் திவானிஷா

வேலணை அம்மன்கோவில் ரோட் ''லக்ஷ்மி-மஹாலில்'' வசிக்கும் திரு. குலசிங்கம் ஞானசௌந்தரி தம்பதிகளின் செல்வப் புதல்வி திவானிஷா தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, கொழும்பில் இருக்கும் அப்பப்பா, அம்மம்மா, சலூதி சித்தப்பா, ஜேர்மனி சித்தப்பாமார், அத்தைமார், மாமா யாழ்ப்பாணம் ராதிகாஜுவல்லர்ஸ். மாமாமார்கள், அப்பப்பாமார், அப்பம்மாமார், பாட்டி, கொப்பாட்டி, கோண்டாவில் தாத்தா, அம்மம்மா, அன்ரிமார், பெரியப்பாமார், பெரியம்மாமார், மற்றும் உற்றார், உறவினர்கள் பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். 1570

# பலியான இராணுவ வீரர் நினைவாக அன்னதானம்!

(கிளிநொச்சி)

முறிகண்டி குண்டுவெடிப்பிலும் மற்றும் அண்மைக்காலவன்முறைச் சம்பவங்களிலும் பலியான இராணுவ வீரர்களின் ஞாபகார்த்தமாக நேற்று கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் இராணுவத்தினர் அன்னதானம் வழங்கினர்

கிளிநொச்சிப் பகுதியில் உள்ள பிச்சை எடுப்பவர்களுக்கு இராணுவத்தினர் அன்னதானம் வழங்கினர்.

## 2,149 பிள்ளைகள்

(புலோலி)

மந்திகை அரசினர் வைத்திய சாலையில் (1984) கடந்த வருடம் 1121 ஆண் பிள்ளைகளும் 1028 பெண் பிள்ளைகளும் பிறந்துள்ளன.

## பேராதனை...

[1-ம்பக்கம்-ம்கலத்தொடர்ச்சி]

இங்கிருந்து புறப்படும் எனக் கூறப்படுகிறது.

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் உடனடியாக முன்னாள் யாழ் மாவட்ட சபை உறுப்பினர் திரு. எஸ். நாகராசாவுடன் 101, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற விலாசத்துடன் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். அவரது தொலைபேசி இலக்கம் 22187 ஆகும்

மாணவர்கள் தங்கள் பெயர், விலாசம், அடையாளஅட்டை இலக்கம் ஆகியவற்றை அவரிடம் சமர்ப்பிக்கவேண்டும்.

மாணவர் பெயர்ப்பட்டியல், யாழ். அரசாங்க அதிபரிடம் சமர்ப்பிக்கப்படும். [க]

## இலங்கை மாலுமி...

(1ம் பக்க 5ம் கலத்தொடர்ச்சி)

காவும் மற்றும் 6 மாலுமிகளும் நேற்று விமான மூலம் இலங்கை வந்துசேர்ந்தனர்.

இவர்கள் மதுரையிலிருந்து சென்னைக்கு டஸ்மூலம் பலத்த பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்டு, சென்னையிலுள்ள இலங்கைத் துணைக்கமிஷனர் திரு. வி. ஜெயநாதனிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இவர்களின் வருகையடுத்து சென்னை விமான நிலையத்திலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது

அதேவேளை கடந்த அக்டோபர் மாதம் முதல் இலங்கையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 17 இந்திய மீனவர்களும் கச்சதீவில் வைத்து விடுதலை செய்யப்பட்டனர். இந்தியக் கடலோரக் காவல்படையினரால் கைப்பற்றப்பட்ட இலங்கை ரோந்துப் படகுபற்றி தகவல் இல்லை என்றும் இலங்கை வெளிநாட்டமைச்சின் செயலாளர் திரு ஜயசிங்கா தெரிவித்தார்

## வேறிடத்துக்கு மாறலாம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்டத்தில் மாணவர்களுக்குப் பயன்படுத்தப்படும் கடற்கரைக்கு அண்மித்த கட்டிடத்தில் குடிகொண்டிருந்த இராணுவத்தினர் விரைவில் வேறிடத்துக்கு மாற்றம் செய்யப்படலாம் எனத் தெரிய வந்துள்ளது. (மா)

நீகல் மினி
தினசரி 10-15, 1-15 மட்டும்.
பாண்டியன்., ரேவதி நடிக்கும்
பாரதிராஜாவின்
புதுமைப் பெண்

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)
வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-15,
கமல் - மாதவி
டிக் டிக் டிக்
(கலர்)

## எச்சரிக்கை!

(சுன்னாகம்)

மாதகல் பகுதியில் குறிப்பிட்ட ஒரு இயக்கத்தைப்பற்றி அவ்வியக்க உறுப்பினர் ஒருவருடன் முறைகேடான முறையில் அவ்வியக்கம்பற்றி விமர்சித்த சிலர் கடும் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளனர்.

இவ் எச்சரிக்கை முதலாவது எச்சரிக்கை என்றும், இயக்கங்கள்பற்றி அவதூறுக விமர்சிப் போருக்கு தகுந்த தண்டனை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டதாம் [கி]

## சந்நிதி முருகன் பழனிக்கு!

[கரவெட்டி]

செல்வச் சந்நிதி முருகன் பழனிக்குப் போயுள்ளாராம்.

இதகவல் பருத்தித்துறையிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற பஸ் பிரயாணிகளுக்கு தெரிவிக்கப்பட்டதாம்,

தொண்டமானாறு பாலத்தடியில் வைத்து சோதனையிடப்பட்டபோதே சோதனையிட்ட 'பிரமுகர்' ஒருவர் இதனைத் தெரிவித்தாராம்.

## கோசல்ராம் காலமானர்

[சென்னை]

திருச்செந்தூர் தொகுதி இந்திரா காங்கிரஸ் கட்சி லோக்சபா உறுப்பினர் திரு. கே ரி கோசல்ராம் நேற்றுக்காலை புதுடில்லியில் காலமானர். இவருக்கு வயது 69 ஆகும்.

''இந்திய தேசிய நலனில் அக்கறை கொண்டிருந்ததுடன் இலங்கைத் தமிழர் சார்பாகவும் திரு கோசல்ராம் குரல் கொடுத்தார்'' என்று இ. காங்கிரஸ் இணைச்செயலாளர் பி. சிதம்பரம் தெரிவித்துள்ளார். [கி]

# புதுடில்லியில் அணு ஆயுதப்படை குறைப்பு மகாநாடு!

## ஆறு நாடுகள் பங்கு கொள்கின்றன!

புதுடில்லி, ஜன 28,

அணு ஆயுதப் படைக்குறைப்புக்குறித்த ஆறு உலகநாடுகளின் மகாநாடொன்று புதுடில்லியில் ஆரம்பமாகியுள்ளது. இந்தியா, ஆர்ஜென்டீனா, கிரேக்கம், சுவீடன், தன்ஸானியா, மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளே இம்மாநாட்டில் கலந்துகொள்கின்றன

இந்நாடுகளின் தலைவர்களான திரு யூனியஸ்நைரேரே, ராஜீவ் அல்போன்ஸின், அந்ரேபப்பந்ரோ, மைக்வோல் டீரோ மாக்ரெட், ஒலம் பால்மே, திரு ராஜீவ்காந்தி ஆகியோரே இம்மகாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

உலக சமாதானத்துக்கு மனிதகுலம் சார்பில் வேண்டுவதே இம்மகாநாட்டின் பிரதான நோக்கமாகும் இவ் உலகத்தலைவர்கள் தனித்தனியாகவும், இறுதியில் கூட்டாகவும் தமது மகாநாட்டுத்தீர்மானங்களை வெளியிடுவர் மறைந்த பிரதமர் திருமதி இந்திராகாந்தி, இத்தகைய மகாநாட்டைக் கூட்டுவதற்கான உலகத்தலைவர்களில் முன்னோடியாக விளங்கினார் என்று கூறப்பட்டது.

(கி)

# கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலை மூன்று வருடமாகியும் பரீட்சைமுடிவுகள் வரவில்லை!

(கொழும்புத்துறை)

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக வெளியேறியவர்களுக்கு மூன்று வருட காலமாகியும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான விசேட சம்பளம் வழங்கப்படாதுள்ளமைக்குப் பிரஸ்தாப ஆசிரியர்கள் கவலையும், விசனமும் தெரிவித்துள்ளன.

1982ம் ஆண்டு ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இறுதிப் பரீட்சையில் சித்தியெய்திய பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கே இக்கதியேற்பட்டுள்ளது.

பல மாதங்களுக்கு முன்னரே சகல சித்திபெற்ற ஆசிரியர்களுக்கும், கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபரால் பரீட்சை முடிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுவிட்டனவென்றும், இது சம்பந்தமாக யாழ் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு விசாரித்தபோது கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையிலிருந்து 1982ம் ஆண்டு இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் விபரக் குறிப்புப்பட்டியல் இதுவரையும் கிடைக்காமையே இவ்விசேட சம்பளதாமதத்திற்குக் காரணமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்துப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர் செல்வி சின்னப்புவிடம் சென்று யாழ் கல்வி திணைக்களத்திற்கு தமது விபரங்கள் அனுப்பிவைக்கப் படாமலிருப்பதுபற்றிக்கேட்ட போது பரீட்சைத் திணைக்களத்திலிருந்து 1982 இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்த பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் பூரணத்துவமான பரீட்சை முடிவுப் பட்டியல் கலாசாலைக்கு வந்து சேரவில்லையென்றும், இப்பட்டியல் கிடைத்ததும் கல்வித்திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப் படுமென்றும் தெரிவித்தார்.

மூன்று வருடங்களுக்கு மேலாகியும் பரீட்சைத்திணைக்களம் தமது பரீட்சை முடிவுகளை அனுப்பிவைக்காமலிப்பது ஏன் என்று பாதிப்புக்குள்ளான ஆசிரியர்கள் கேள்வி எழுப்பியுள்ளதுடன் ஆசிரியர் சங்கங்களும் இவ்விடயத்தில் பாராமுகமாக இருப்பதாகவும் கவலை தெரிவித்துள்ளனர்.

## சட்டத்தரணி குடும்பம்பாதிப்பு

(யாழ்ப்பாணம்)

இருவாரங்களுக்கு முன்னர் கொக்குவில் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின்போது அப்பகுதியைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரின் குடும்பமும் உயிராபத்திலிருந்து தப்பியது

கொக்குவில் சாம்பியன் ஒழுங்கையைச் சேர்ந்த சட்டத்தரணி திரு ஆர். தவராஜாவின் குடும்பமே இந்த ஆபத்தான நிலையை எதிர்நோக்கியது.

இராணுவத்தினர் சாம்பியன் ஒழுங்கையிலும் இறங்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்திருந்தனர். இதனால் சட்டத்தரணியின் வீட்டு விறாந்தையின் முன்புறப்பகுதியூடாகவும் ரவைகள் ஊடறுத்துச் சென்றன.

இதேவேளை திருமதி தவராஜாவும், அவரது ஒரு வயதுக் குழந்தையும் விறாந்தைப் பகுதியிலிருந்தும் மயிரிழையில் உயிர்தப்பி வெளியேறினர்.

# அமைதியைக் குலைக்கும் ரோந்துப்படகு

[சுன்னாகம்]

மாதகல் கடல் கண்காணிப்பு வலயத்தில் 'வீரசூரியா' என்ற கடற்படை ரோந்துப் படகே அடிக்கடி பெருஞ்சத்தத்துடன் குண்டு களைத் தீர்க்கின்றது என்று மாதகல் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்

கண்காணிப்பு நடவடிக்கையாக இப்படகு தீர்க்கும் பீரங்கி வேட்டுகள் மாதகல் பகுதி மக்களைப் பெரிதும் அமைதியிழக்கச் செய்கின்றது எனத் தெரிவிக்கப்பட்டது.

மாதகலில்கடல் பகுதியில் கண்காணிப்புவலயம் தடை செய்யப்பட்ட பாதுகாப்பு வலயம் எனபன பிரகடனப் படுத்தப்பட்டபோதிலும், 'வீரசூரியா' வின் முழக்கங்கள் அவற்றுக்குஅப்பாலும் மக்களைப் பீதியடையச்செய்கின்றது

மாலையானதும் விரைந்து கரைப்பகுதிக்கு வீரசூரியா' வந்து விடுகிறது தொடர்ந்து அதிகாலைவரை அடிக்கடி மிகவும் சத்தத்துடன் பீரங்கி வேட்டுகளை இது தீர்த்தபடியே இருக்குமென்றும் கூறப்பட்டது

பீரங்கி வேட்டுச் சத்தங்களால் மக்கள் அமைதி இழந்திருப்பதுடன் அவ்வேட்டுக்கள் எம்மீது எந்நேரமும் திரும்பலாம் என்ற அச்சத்துடனும் அவர்கள் காலங்களிப்பதாகக் கூறப்பட்டது [கி]

# கொள்ளையடிக்கப்பட்ட மிளகாயில் நஞ்சுத்தன்மை!

[கிளிநொச்சி]

கிளிநொச்சி விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இனந்தெரியாதவர்களால் கொள்ளையடிக்கப்பட்ட செத்தல் மிளகாயில் நஞ்சு கலக்கப்பட்டிருந்ததாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்

மிளகாய் விதைகளைப் பெறுவதற்காக அதிகளவு கிருமிநாசினிகள், பங்கசு கொல்லிகள், விதைப் பாதுகாப்பு திரவங்கள் வீசப்பட்டு இந்த மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டதால் இதை உணவாக உட்கொள்பவர்களுக்கு உடனடி உயிராபத்து ஏற்படாவிடினும் நாளடைவில் இதன் மூலம்பாதிப்பு ஏற்படும் என்று அந்த அதிகாரி தெரிவித்தார்

வடபிராந்திய மண் வளத்துக்கு ஏற்பதும் பிரசித்திபெற்றதுமான நவீன மிளகாய் இனமான கே ஏ. வர்க்கஸ் செத்தல் மிளகாய் விதைகளை வடபகுதி விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காகவே இங்கு வைக்கப்பட்டிருந்தது இதனையே இனந்தெரியாதவர்கள் கொள்ளையடித்துச் சென்றனர்

இந்த செத்தல்களிலிருந்து விதை பெற்ற பின்னர் தோல்கள் கூட உணவு தேவைக்காக விற்பதற்கு அனுமதிக்கப்படவில்லை எனவும், இதை எடுத்துச் சென்றவர்கள் விதைக்காக மட்டும் பாவித்தாலே உரிய பயனைப் பெற முடியும் அல்லாவிடில் உணவுக்கு பாவித்தால் இதன் விளைவைக் காலப்போக்கில் உண்டவர்களின் உடல் நலக்குறைவினால் அவதானிக்க முடியும் என்றும் அந்த அதிகாரி கூறினர்.

# ரேகணவின் ஜே. வி. பிக்கும் 'உமா'வுடன் தொடர்பு?

## 'இரகசிய வானொலியில்' ஒலிக்கும் சிங்களக்குரல் ஜே. வி. பி. பிரமுகருடையதாம்!

(கொழும்பு)

ரோஹண விஜேவீரவின் ஜே. வி. பி. கட்சி உறுப்பினர்கள் சிலருக்கு உமாமகேஸ்வரன் தலைமையிலான தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துடன் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

18 வயது முதல் 20 வயது வரையிலான சுமார் 100க்கும் 150க்கும் இடைப்பட்ட சிங்கள இளைஞர்களும், யுவதிகளும் உமாமகேஸ்வரனின் தமிழ் நாடு முகாம்களில் பயிற்சி பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றனது.

இலங்கைப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்துள்ள சில தகவல்களிலேயே மேற்கண்ட விபரங்களும் காணப்படுவதாகக் கூறப்பட்டது.

உமாமகேஸ்வரனின் இயக்கத்துடன் தொடர்புகொண்டுள்ள ஜே.வி.பி. சிங்கள இளைஞர் ஒருவரே அந்த இயக்கத்தின் அந்தரங்க ஒலிபரப்புச் சேவையில் சிங்கள அறிவிப்பாளராக இருக்கிறாரென்றும் தெரிவிக்கப்பட்டது.

உமாவுடனான ஜே. வி. பி. இயக்கத் தொடர்பு, தமிழ்த்தீவிரவாதிகளுடன் சேர்ந்து இலங்கையில் மார்க்ஸிஸ-லெனினிஸ அரசொன்றை ஸ்தாபிப்பதே என்றும் தெரிவிக்கப்பட்டிருப்பதுடன், இந்த இலக்கை அடைய சிங்கள இளைஞர்கள் சிலரும் தமிழ்த் தீவிரவாதிகளுடன் தோளோடு தோள் சேர்ந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [கி]

## மணிவாக்கு

அலங்காரமாக ஆடை அணிந்துகொள்ளுவோம்
அங்குமிங்கும் நாம் திரிந்து அலைகிறோம்
கலங்காத நன்னெறியிற் செல்கிறோமில்லை
கந்தா முருகா என்று கத்திக்கொள்ளுவோம்

— சிவயோக சுவாமிகள்

# நமது நோக்கு

## பொதுமக்கள் சொத்து மீட்க முன்வாருங்கள்

'யாழ்ப்பாணத்தைப் பட்டினிச் சாவு விரட்டுகிறது' என்று லண்டன் டைம்ஸ் குறிப்பிட்டதை ஒரு தீர்க்க தரிசனம் என்று கொள்ளலாமா?

செத்தவர்களும் சாகவிருப்பவர்களும் சாக, உயிர்தப்பியிருப்பவர்கள் பசிக்கும் பட்டினிக்கும் இரையாவது ஆபிரிக்காவில் மட்டும் தானென்று நாம் நினைத்த காலம் கடந்துவிட்டது.

பல்லாயிரக்கணக்கான மக்கள் - நடுவர்க்கத்தினர் உட்பட வாழ வழியின்றித் தவிப்பது இன்றைய நிலை. இனிமேல் விமோசனம் எங்கிருந்து வரும்?

1983 ஆடி மாதக் கலவரத்தில் உயிர்தப்பி யாழ்ப்பாணம் திரும்பியவர்கள் பலர் உடைமையில் தப்பி இருந்த பாகிநகைநட்டுகளை தனியார் வங்கிகளில் பாதுகாப்புக்காக வைத்திருந்ததை நாமறிவோம்.

யாழ்ப்பாணத்திலே வீடுகளில் கொள்ளையென்றும், ராணுவ பரிசோதனையில் அசம்பாவிதத்துக்கு இடமுண்டென்றும அஞ்சியவர்கள் வங்கியில் தஞ்சம் புகுந்தனர். சுமார் 500 குடும்பங்கள் இவ்வித பாதுகாப்பில் நம்பிக்கை கொண்டனர்

இன்றுசுமார் ஐந்நூறு லட்சம், கூடவாயுமிருக்கலாம். பெறுமதியான தங்க நகைகள் யாழ்ப்பாணத்தின்பிரபல தனியார் வங்கியான ஹற்றன் நாஷனல் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

வங்கியில் கொள்ளையென்றால் அதற்குஈடுசெய்வதுவங்கியே என்பது சாதாரண மக்களின் நம்பிக்கை; இது அப்படியல்ல. பாதுகாப்பில் வைக்கப்பட்டசொத்துக்கும் வங்கிக்கும் ஒரு தொடர்புமில்லை; இதனை வைத்த சொந்தக்காரர் நன்கறிவார்கள். வங்கி நன்கு விளங்கப்படுத்திய விடயம் இது

வங்கிப் பணத்தையும், வங்கியின் சொத்துக்களையுமே நாம் கொள்ளையடித்தோம் மக்களுக்கு மறுமொழி சொல்வது வங்கியின் பொறுப்பென்று இந்தத் தீவிரச் செயலில் ஈடுபட்டவர்கள் நினைத்தால் அது பெருந்தவறு.

எங்கள் நேற்றைய பத்திரிகையில் யாழ். பிரஜைகள் குழுச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியமும், அதன் பிரதிநிதி திரு ஆர். ஜே குணரத்தினமும்விடுத்த விளக்கத்தையும் வேண்டுகோளையும் படித்தவர்கள் இதனை ஒரு சாமான்யக் கொள்ளை என்று கருதமாட்டார்; தனிப்பட்ட ஒருவராலோ அல்லது சாமானிய ஒரு குழுவினராலோ நடத்தப்பெற்றகொள்ளைச் செயலென்றுகொள்ளஇடமில்லை.

ஒரு இரவு முழுதும் நடந்தேறிய திகிலளிக்கும் தீவிர செயல், வங்கியே பாதிக்கப்படுகிறதென்ற எண்ணத்தில் நடைபெற்றிருக்கலாம்; அல்லது செல்வரின் மிதமிஞ்சிய வைப்புச் செப்பு இதுவென நினைத்திருக்கலாம்.

உண்மை என்ன - யாழ்ப்பாணத்தின்வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைத் தரைமட்டமாக்கவல்ல இந்தத் துணிகரச் செயல் தனிக் குடும்பங்களை மட்டுமல்ல சில பிரபல தேவஸ்தானங்களையே ஸ்தம்பிக்க வைக்கிறது; தெய்வ நீதிக்கும் மனிதாபிமானத்துக்கும் முரணான செயலுங்கூட.

அச்சுவேலிச்சம்பவத்தைக் குறிப்பிட்ட ஒரு ஆத்மா தம்முடைய சேமிப்பனைத்தையும் வங்கிக்கு இடமாற்றம் செய்த கதை சோகமானது. வறை ஓட்டுக்குத் தப்பி நெருப்பில் விழுந்தது போன்ற கதையைப் போன்றது.

மக்களின் உயிர்ப்பாதுகாப்பு, அவர்களின் உடைமைப் பாதுகாப்பு இன்று யாழ்ப்பாணத்தில் கேள்விக்குறி; இருப்பினும் ஆண்மையுள்ளமக்கள் கூட்டத்தினர் இவ்வித சமூக விரோதமான செயல்களைக் கண்டித்தும், தண்டித்தும் வருகின்றனர் என்ற தேற்றம் இதுகாறும் இருந்து வந்தது.

இலங்கையில் மிகப்பெரிய கொள்ளை இதுவாக இருக்கலாம். எமக்கு முக்கியமானது இச்சொத்துபொதுமக்களுக்கு எய்ப்பினில் வைப்பு என்பதும்,இதனைஇழந்தவர்கள் பலர், எல்லாம் இழந்த நிலையில் தெருவில் நிற்பவர்களே என்பதுமாகும்?

தன்னந்தனியனாய் நின்று தத்தளிக்கும் சமூகத்துக்கு நேர்ந்த நட்டத்தை மீட்க முன்வருவோர் உண்மையில் இரட்சகர்களே.

### சம்பளப்...

(1ம்பக்க 2ம் கலத்தொடர்ச்சி)

இளைஞர் பயிற்சி நிலையத்தில் மூன்று வாகனங்கள் இனந்தெரியாத நபர்களினால் துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது

பயிற்சி நிலையத்துக்குச் சென்ற 6 நபர்கள் அங்குள்ளவர்களை துப்பாக்கி முனையில் பயமுறுத்திவிட்டு வான், ஜீப மோட்டார்சைக்கிள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றனராம்.

இதேவேளை பரந்தன் விவசாயப்பண்ணையிலிருந்து துவிச்சக்கரவண்டி,மற்றும பொருட்கள் என்பன கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. வட்டக்கச்சி பண்ணையிலிருந்து ரான்ஸ்போமர் ஒன்றும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 68ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the GeneralPost office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Tele phone number 22389-24126.

### யாழ். சட்டத்தரணிகள் கோரிக்கை:

# நீதிசேவைகள் கமிஷன் ஏற்கவில்லை!

(யாழ்ப்பாணம்)

வழக்கு விசாரணைகளை காலவரையின்றி ஒத்திப்போடுமாறு யாழ். சட்டத்தரணிகள் சங்கம் விடுத்தகோரிக்கையை நீதிச்சேவைக் கமிஷன் ஏற்கவில்லை என்று தெரிகிறது,

யாழ். சட்டத்தரணிகள் சங்க கோரிக்கையை நீதிச் சேவைகமிஷன் ஏற்கவில்லையெனகமிஷன்செயலாளர்அறிவித்திருப்பதாக யாழ் சட்டத்தரணிகள் சங்கத்தினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதைத் தொடர்ந்து தங்கள் கோரிக்கை தொடர்பாக நீதிச் சேவை கமிஷன் தெரிவித்துள்ள பதில் பற்றி ஆராய்வதற்கு நாளைக் காலை சட்ட நூலகத்தில் சட்டத்தரணிகள் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. [க]

### கத்தோலிக்க...

(1மபக்க 5ம்கலத் தொடர்ச்சி)

இச் சோதனையின்போது ராணுவத்தினர் மிசவும் கண்ணியமாக நடந்துகொண்டதாக ஆலயகுருவானவர் ஒருவர் கூறினார் ராணுவ அதிகாரி ஒருவர் ஆலயத்தில் தாம் சிகரட் பாவிப்பதற்கு தடையுண்டா என வினவியபோது ஆலயம் தங்களின் புனித ஸ்தலம்என்று குருவானவர் தெரிவிக்கவே, அதிகாரி சிகரட்டை பற்றவைக்காமல் பாக்கட்டில் போட்டுக் கொண்டதாகக் கூறப்படுகிறது. [க]

### நியுயோர்க் தமிழ்சங்கம் எம். ஜி. ஆருக்கு வரவேற்பு

(நியுயோர்க்)

தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரனுக்கு நியுயோர்க்கிலுள்ள தமிழ்ச்சங்கப் பிரிவுகள் வரவேற்பொன்றை அளித்தன

திரு. எம். ஜி ராமச்சந்திரன் 250அடி தூரம் நடந்து வந்து வரவேற்பு அரங்கை வந்தடைந்தார். இவர் 90நிமிடங்கள் வரவேற்பில் கலந்து கொண்டார்.

திரு ராமச்சந்திரன் தமது தாயாரின்நினைவாகநியுயோர்க் புறூக்ளின் மருத்துவமனையில் நிலையமொன்றையும் அமைக்கப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

### துர்க்கையம்மன்..

[1-ம்பக்க 2ம்கலத்தொடர்ச்சி]

பாடு முடிந்துவந்த 18 இளைஞர்களை தம்முடன் அழைத்துச் சென்று மாலையில் பலாலி இராணுவ முகாமில் இருந்து விடுவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்றுப் பகல் தெல்லிப்பளை வயாவிளான் பாதையில் சென்ற இராணுவத்தினர் சில இடங்களில் வேலிகளை தீயிட்டதாகவும், சிலரை தாக்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமாலை மயிலிட்டி மாவிட்டபுரம் பாதையால் இராணுவத்தினர் நடை பவனியாக வருவதாக கேள்விப்பட்ட, வீதியோரத்தில் உள்ள வீட்டுக்காரர் வீடுகளைவிட்டு தோட்டங்களில் ஓடிமறைந்தனர். ஆனால் அப்பாதையால் இராணுவத்தினர் வந்தனராயினும் அவர்கள் மதகு உள்ள இடங்களில் இறங்கி அவற்றை பார்வையிட்டுச் சென்றனர்.

அத்துடன்மாவிட்டபுரத்தில் இருந்து காங்கேசன் துறை செல்லும்பாதைகளில் உள்ள மதகுகளையும் சோதனை செய்து சென்றார்கள்.

### ஹற்றன் நஷனல்...

(1-ம்பக்க 3ம்கலத்தொடர்ச்சி)

டகங்களில், 59 லொக்கர்கள் உடைக்கப்படாமலிருந்தது

இந்த 59 லொக்கர்களிலும் சுமார் ஒரு கோடி பெறுமதியான நகைகள் இருந்திருக்கும் எனக் கருதப்படுகிறது.

சம்பவதினம் பிற்பகல் 4-30 மணிக்கு வங்கிக்குள் சென்ற கொள்ளையர்கள் மறுநாள் அதிகாலை 5-30 வரை சுமார் 13 மணித்தியாலங்கள் உள்ளே இருந்ததாகக் கூறப்படுகிறது

பொழுது விடிந்துவிட்டதால் மிகுதி 59 லொக்கர்களையும் உடைக்க நேரமில்லாத காரணத்தினால் அவற்றை விட்டுச் சென்றிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது.

ஆறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களும், கண்கள் கட்டிய நிலையில் இரவு முழுவதும் வான் ஒன்றில் துப்பாக்கி முனையில் பணயம் வைக்கப்பட்டிருந்ததாகவும் மேலும் கூறப்படுகிறது

நேற்றும் லொக்கரில் பணம் போட்டவர்கள் வங்கிக்கு வந்து பார்வையிட்டனர். [க]


## மரண அறிவித்தல்

### நாகமுத்து கந்தையா

(மலாயன் பென்சனியர்)

உரும்பராய் நாகமுத்து கந்தையா (மலாயன் பென்சனியர்) காலமாகிவிட்டார். இவர் பகவதியம்மாவின் அன்புக் கணவரும் அட்டோர்னி ஜெனரல் காரியாலய ஓய்வுபெற்ற ஊழியர் குலராசன், குலசேகரன் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார். இறுதிச் சடங்குகள் 29-1-85 செவ்வாய்க்கிழமை காலை பத்து மணிக்கு உரும்பராய் வேம்பன் மயானத்தில் நடைபெறும்.

1567

## மரண அறிவித்தல்

### திருமதி துரையப்பா நாகரத்தினம்

திருமதி. துரையப்பா நாகரத்தினம் அவர்கள் காலமானார். அன்னார், திருமதி இராசம்மாவின் அன்புத்தாயாரும், திரு. க. செ சோமசேகரம் [சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசும்] அவர்களின் அருமை மாமியாரும், டாக்டர். சோ. சண்முகலிங்கம், திருமதி. சோமாவதி மகேந்திரன் [கொழும்பு] திருமதி. இந்திராணி சண்முகமூர்த்தி [இந்தியா] அவர்களின் அன்புப் பேத்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 29-1-85 [இன்று] பிற்பகல் 2 மணிக்கு தகனக்கிரியைகளுக்காக 180, நாவலர் வீதியில் அமைந்துள்ள இல்லத்தில் இருந்து கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

1584 தகவல்; C. C. சோமசேகரம்

## மரண அறிவித்தல்

### பாலசிங்கம் மகாலிங்கசிவம்

பாலசிங்கம் மகாலிங்கசிவம் 21-1-85 அன்று கிளிநொச்சியில் அகாலமரணமானார். அன்னார் திருத்தா தேவியின் அன்புக் கணவரும் கிருஜா (யாழ். தமிழ் கன்னியர்மட பாடசாலை), பிரபாகரன் (யாழ் சென் ஜேன்ஸ் கல்லூரி) பிரியா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலம்சென்ற கிளிநொச்சி பராசக்தி தியேட்டர் உரிமையாளர் முருகேசுவின் மருமகனுமாவார். அன்னாரின் ஈமக்கிரிகை 23-1-85 அன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சியில் நடைபெற்றது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: திருமதி மகாலிங்கசிவம்
கிளிநொச்சி.

1574

## மரண அறிவித்தல்

### தம்பு சின்னத்துரை

(ஓய்வுபெற்ற அரசாங்க மரக்கூட்டுஸ்தாபன ஊழியர்)

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் பாடசாலை ஒழுங்கையைச் சேர்ந்த தம்பு சின்னத்துரை 28 -01 - 85 நேற்றுக் காலமானார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் தவமணி, தவராசா ஆகியோரின் அன்புத் தந்தையும் பாலசுப்பிரமணியம் (உரிமையாளர் - பாலச்சந்திரா மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம் தங்கம், நவீன சந்தை சாவகச்சேரி இன்பராணி ஆகியோரின் அன்பு மாமனாரும் பாலச்சந்திரா (மாணவன் சென்பற்றிக்ஸ் கல்லூரி) பாலரஞ்சன் (மாணவன் மானிப்பாய் இந்துக் கல்லூரி) பாலதனுஷன், பாலமுகுந்தன், பார்த்தீபன், பார்த்தீபா ஆகியோரின் பேரனுமாவார் ஈமக்கிரிகைகள் அன்னாரின் இல்லத்தில் 29 01- 85 மாலை 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனத்துக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச செல்லப்படும்!

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள, நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

1585